

# இடம் பொருள் கலைஞர்

103

**மகிழவன்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் இராமநாதபுரம் மாபெரும் கூட்டுக்குடிநீர்த் திட்டம்!










## இராமநாதபுரம் மாபெரும் கூட்டுக்குடிநீர்த் திட்டம்!

### ‘தண்ணியில்லா காட்டின் தாகம் தீர்ந்தது’

*1971*-ஆம் ஆண்டு, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளில், தமிழ்நாட்டில், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தைத் தொடங்கி வைத்தார் அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழ்நாட்டில் கிராமம் மற்றும் நகரப் பகுதிகளில் அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட, சுகாதாரமான குடிநீர் வழங்க வேண்டும் என்கிற இலக்குடன் அந்த வாரியம் தொடங்கப்பட்டது.

இந்திய அளவில் வேறு எந்த மாநிலத்திலும் அப்படியான இலக்கு வைக்கப்படாதபோதே, தமிழ்நாட்டில் அதைச் செயல்படுத்தினார் கலைஞர். இந்த வாரியத்தின் வழியாகப் பல்வேறு கூட்டுக்குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி, தமிழ்நாட்டின் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில், உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட மகத்தான திட்டம் தான் ‘இராமநாதபுரம் மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டம்’.

### வறட்சி மிகுந்த மாவட்டம்

ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து, இராமநாதபுரம் மாவட்டம் 1985 -ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டது. நீண்ட கடற்கரையைக் கொண்ட மாவட்டம், மூன்றுபுறமும் கடலால் சூழப்பட்ட பகுதி என்பதால், நிலத்தடி நீர்ப் பற்றாக்குறை அங்கு நீண்ட காலமாகவே இருந்து வந்தது.

மக்களின் குடிநீர்த் தேவைக்குத் தோண்டப் படும் கிணறு உள்ளிட்ட நீராதாரங்களில் சில நாட்களில் நன்னீர் வற்றி, உவர் நீர்தான் கிடைக்கும். இதனால், கோடைக் காலத்தில் மட்டுமில்லாமல், எல்லா நாட்களிலும் மக்கள் குடிநீர்ப் பற்றாக்குறையால் அல்லல்படுவது தொடர்கதையாக இருந்தது.

அப்போதெல்லாம், அரசு ஊழியர்களில் தவறு செய்வோரைத் தண்டிக்க வேண்டும் என்றால் ‘இராமநாதபுரத்துக்கு மாத்திடுவேன்’ என்று வேடிக்கையாகச் சொல்வது இயல்பாக இருந்தது. குறிப்பாக, ‘தண்ணி இல்லாத காடு’ என்று சொல்லப்பட்டுக் கொண்டிருந்த நிலையை, மாற்றத் திட்டமிட்டார் கலைஞர்.

### கலைஞர் தீட்டிய திட்டம்

கடந்த நூறாண்டு காலத்தில் நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீரைக் கூட வழங்க முடியாத சூழல், இராமநாதபுரத்தில் நிலவி வந்தது. கழக ஆட்சிக் காலத்தில் சிறிதும், பெரிதுமான ஆழ்குழாய்த் திட்டங்கள், வெளியூர்களில் இருந்து குடிநீர் விநியோகம் என ஏற்பாடுகள் செய்யப்பட்டாலும், இராமநாதபுரம் மாவட்டத்துக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து, நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டினார் கலைஞர். அதேநேரத்தில் தமிழ் நாட்டில் பிற மாவட்டங்களை ஒப்பிடும்போது, பொருளாதாரம் மற்றும் தொழில்துறை வளர்ச்சியிலும் இராமநாதபுரம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதையும் மாற்றத் திட்டமிட்டார் கலைஞர்.

இதையடுத்து, 2007-ஆம் ஆண்டில் ,திருச்சி மாவட்டம், முத்தரசநல்லூர் மற்றும் கடியாகுறிச்சி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 616 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாபெரும் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை 2007-ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று தொடங்கி வைத்தார், முத்தமிழறிஞர் கலைஞர்.

### பயன்பெறும் பகுதிகள்

சிவகங்கை, புதுக்கோட்டை, திருமயம், திருப்பத்தூர், சிங்கம்புணரி, இளையான்குடி, பரமக்குடி, இராமநாதபுரம், இராமேஸ்வரம் என மாவட்டத்தின் கடைசி எல்லையான உச்சிநத்தம் வரையிலும் சிமெண்ட் குழாய்கள் மூலம் குடிநீர் கொண்டு செல்லப்பட்டது.

திட்டத்தின் வழியாக இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை உள்ளிட்ட மூன்று மாவட்டங்களில் உள்ள 5 நகராட்சிகள் 11 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றி யங்களில் உள்ள 3 ஆயிரத்து 163 கிராமப்புறக் குடியிருப்புகளை உள்ளடக்கி, 15 லட்சத்து 75 ஆயிரத்து 682 மக்கள் பயனடையும் வகையில், இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத் தன்மைச் சட்டம் 1998-ஐ பின்பற்றி இத்திட்டத்தை ஏழு தொகுப்புகளாகப் பிரித்து, மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்ற கலைஞர் திட்டமிட்டார்

**பழுதடைந்த குழாய்களைச் சீரமைக்க, ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார் இன்றைய முதலமைச்சர் அவர்கள். கலைஞர் எந்த நோக்கத்திற்காக திட்டத்தைக் கொண்டு வந்தாரோ அதனை முழுமையாகச் செயல்படுத்தும் நோக்கில் திட்டம் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.**

### திட்டத்தை நிறைவேற்றிய தளபதியார்

‘குடிநீர்த் திட்டத்தை மூன்றாண்டுகளுக்கு உள்ளாக முடித்திட வேண்டும்’ என எண்ணிய கலைஞர் அவர்கள் திட்டத்தைச் செயல்படுத்தும் பெரும் பொறுப்பை அன்றைய துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார்.

திட்டப்பகுதியை அடிக்கடி பார்வையிட்டு, ‘பணிகளை மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நிறைவேற்றி முடித்தால், அந்த உழைப்பைப் பாராட்டும் வகையில், களத்தில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு விருதுகள் அளிக்க முதல்வர் கூறியுள்ளார்’ என அதிகாரிகளை ஊக்கப் படுத்தினார், அன்றைய துணை முதல்வர், இன்றைய முதல்வர் அவர்கள்.

திட்டத்தை நிறைவேற்ற 5 ஆயிரத்து 220 கிலோ மீட்டருக்கு பிரதான நீருந்துக் குழாய்கள், 111 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், 601 உயர் மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், 518 மின் மோட்டார்கள், மின்மோட்டார் அறைகள், நீர்ச் சேகரிப்பு கிணறுகள் நிறுவப்பட்டு, திட்டப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே முடிக்கப்பட்டன.

இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்பட்ட இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 15 லட்சத்து 75 ஆயிரத்து 682 பேர் பயன் பெறும் வகையில், 11.06.2009 அன்று காணொலிக் காட்சியின் வழியாக, முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தபடியே, 15.06.2009 அன்று 234 அதிகாரிகளுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பாராட்டும், பரிசுகளும் வழங்கப்பட்டன. துணை முதலமைச்சர் அவர்களின் அயராத உழைப்பைப் பாராட்டி, அவருக்கும் பரிசு வழங்கிப் பாராட்டினார் கலைஞர்.

### கண்டுகொள்ளாத அ.தி.மு.க. அரசு

2011-ஆம் ஆண்டு அமைந்த அ.தி.மு.க. தலைமையிலான அரசு இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குப் பொருத்தப்பட்ட தண்ணீர் இணைப்புக் குழாய்களை முறையாகப் பராமரிக்கவில்லை. இதனால் ஆங்காங்கே பழுதுபட்டதன் காரணமாக முழுமையாகத் தண்ணீர் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மக்கள் மீண்டும் குடிநீருக்கு அலையும் அவலம் ஏற்பட்டதுடன், குடிநீர்த் திட்டத்தை முறையாகச் செயல்படுத்த வேண்டும் என ஆங்காங்கே தன்னெழுச்சியாகப் போராடி வந்தனர். இந்நிலையில், மக்களின் 10 ஆண்டு கால போராட்டம், ‘திராவிட மாடல் அரசு’ ஆட்சி அமைந்ததும் முடிவுக்கு வந்தது.

பழுதடைந்த குழாய்களைச் சீரமைக்க, ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார் இன்றைய முதலமைச்சர் அவர்கள். கலைஞர் எந்த நோக்கத்திற்காக திட்டத்தைக் கொண்டு வந்தாரோ அதனை முழுமையாகச் செயல்படுத்தும் நோக்கில் திட்டம் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வழியாக, அப்பகுதி மக்களால் இன்றும் நினைவுகூரப்பட்டு வருகிறார் முத்தமிழறிஞர் கலைஞர்.

**...வலம் வருவோம்**

## அசத்திய அஸ்தினாபுரம் அரசுப்பள்ளி!




சென்னை, கூடுவாஞ்சேரியை அடுத்த ‘அஸ்தினாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி’ மாணவர்களின் படைப்பாற்றல், தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ஆகியோரின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. மூத்த படைப்பாளிகள் பலரும் மாணவர்களை வாழ்த்தி வருகின்றனர்.

அந்தப் பள்ளியில், ஆறாம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயின்றுவரும் 19 மாணவர்கள் ‘ஒரு ஊர்ல’ எனும் சிறுகதை நூலை வெளியிட்டு எழுத்தாளர்களாகப் பரிணமித்துள்ளனர். பள்ளிக்கல்வித்துறை சார்பில், நடத்தப்படும் ‘தேன்சிட்டு’ இதழை வாசிக்கும் அந்த மாணவர்கள், அந்த இதழில், தங்களின் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

அந்த மாணவர்கள் எழுதிய சிறுகதைகளை ‘ஒரு ஊர்ல’ என்கிற நூலாக பத்தாம் வகுப்பு பயிலும் ரு.திவ்யஸ்ரீ, ம.பிரவீனா என்கிற இரு மாணவிகளும் சேர்ந்து வெளியிட்டுள்ளனர். இந்த நூலின் ஆங்கில மொழிப்பெயர்ப்பும் வெளியாகியுள்ளது.

‘அரசுப் பள்ளி மாணவர்களின் கதைகள்’ என்கிற அடையாளத்துடன் இந்த நூல் வெளியாகியுள்ளது. இதையறிந்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தனது சமூகவலை தளப் பக்கத்தில் பாராட்டியிருந்தார். அவரது பதிவு மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குச் சென்று அவர்களும் வாழ்த்தியிருக்கின்றனர்.

‘கல்வியின் வழியே படைப்பாற்றலும் - பகுத்தறியும் சிந்தனையும் மாணவர்கள் மத்தியில் வளர்ந்திட வேண்டும் என்பது நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணம்’ என துணை முதலமைச்சர் கருத்துத் தெரிவித்து வாழ்த்தியுள்ளார். அந்த எண்ணம் ஈடேறிக் கொண்டிருக்கிறது.

## :.ப்ளாஷ்பேக்





‘சிவகாசி’ ஜீவா



### இளைஞர் அணியினர் நடத்தி வைத்த திருமணம்!

1986-ஆம் ஆண்டு, ஜனவரி 13 அன்று என்னுடைய திருமணம், அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், சிவகாசியில் நடைபெற்றது. அதே நாளில் ‘எம்.ஜி.ஆர். மன்ற மாநாடு’ மதுரையில் நடைபெற்றதால், அதைக் காரணம்காட்டி தளபதி அவர்களுக்கான வரவேற்பு வளைவுகளை அகற்றச் சொல்லி, பல நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. இளைஞர் அணி நிர்வாகிகள் துணிச்சலுடன், அந்த சவாலை எதிர்கொண்டு என்னுடைய திருமணம் சிறந்த முறையில் நடைபெற வழிவகுத்தனர். இந்நிகழ்வில் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் வே.தங்கபாண்டியன், பரிதி இளம்வழுதி, நாஞ்சில் சம்பத், வி.ப.இராசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**- ‘சிவகாசி’ ஜீவா, தலைமைக் கழகப் பேச்சாளர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ‘திராவிட நடிகர் கழகம்’

‘சீர்திருத்தக் கருத்துகளை நாடகம் மூலம் பரப்பலாம்’ என்கிற எண்ணத்தை பெரியாரிடம் வெளிப்படுத்தினார் பேரறிஞர் அண்ணா. அதற்கு பெரியாரும் ஒப்புதல் தர, ஈரோடு சுயமரியாதைச் சங்கக் கட்டடத்தில் 24.11.1939 அன்று ‘திராவிட நடிகர் கழகம்’ தோற்றுவிக்கப்பட்டது. தலைவராக ஈ.வெ.கிருஷ்ணசாமி, துணைத் தலைவராக எம்.ஆர்.பாலகுருமூர்த்தி, செயலாளர்களாக அண்ணா, பாட்சா சாயுபு ஆகியோரும், மேடை நிர்வாகிகளாக 5 பேரும் நியமிக்கப்பட்டனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

727

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131